DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 16/2024 Crime No. 164/2023 Station Appakodal

| | | | |
|---|---|---|---|
| Name | PW-3/LW7 – முத்துகுமார் | Village | |
| Father Name | குமார் | Taluk | |
| Age | 26 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 04.09.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் அடசப்பாளையத்தில் குடியிருந்து கொண்டு, எலக்ட்சிஷனாக வேலை செய்து வருகிறேன். சுமார் 1 ஆண்டிற்கு முன்பு விபத்து நடந்த இடத்திற்கு போலீசார் வந்து பார்வையிட்டு என் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **இந்த சாட்சி மூலமாக பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் இட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் இட்டேன்.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும், குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.**

DEOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 16/2024 Crime No. 164/2023 Station Appakodal

| | | | |
|---|---|---|---|
| Name | PW-2/LW4 - கார்த்திகேயன் | Village | |
| Father Name | ரவிச்சந்திரன் | Taluk | |
| Age | 20 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 04.09.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் காளிங்காராயன்பாளையத்தில் குடியிருந்து கொண்டு, ஒர்க்ஷாப்பில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன நபர் எனக்கு யார் என்றே தெரியாது. கடந்த 23.10.2023 ம் தேதியன்று, மாலை சுமார் 06.15 மணியளவில், நான் ஓடைமேடு, சொக்கண்ண கவுண்டர் வீட்டிற்கு அருகில் நின்று கொண்டு எனது நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது சக்தியிலிருந்து வந்த பைக் ஹாரன் அடித்துக் கொண்டு தான் செல்லும் திசையில் இடதுபுற ஓரமாக வந்து கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களுக்கு எதிர் திசையில் வந்த டிராக்டர் லைட் போடாமல் வலது புறமாக ஏறி வந்து பைக்கின் மீது ஏறிவிட்டது. நான் இதை 10 அடி தொலைவிலிருந்து பார்த்தேன். ஆஜர் எதிரிதான் டிராக்டரை ஓட்டி வந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும், குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.**

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 16/2024 Crime No. 164/2023 Station Appakodal

| | | | |
|---|---|---|---|
| Name | PW-1/LW1- நாகேஸ்வரன் | Village | |
| Father Name | கல்யாணசுந்தரம் | Taluk | |
| Age | 25 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 04.09.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் கள்ளிப்பட்டியில் குடியிருந்து கொண்டு, கேட்டரிங் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன சதீஷ் (எ) ஜனார்த்தனர் எனது அண்ணன் ஆவார். கடந்த 23.10.2023 ம் தேதியன்று, மாலையில் எனது அண்ணன் அவனது அப்பாச்சி பைக்கில் சிவக்குமார் என்பவரை பின்னால் உட்கார வைத்துக் கொண்டு மாலை சுமார் 06.15 மணியளவில், சக்தி-அந்தியூர் மெயின் ரோட்டில் அத்தானி, ஓடைமேடு, சொக்கண்ணன் வீட்டிற்கு எதிரியில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது எதிரே வந்த டிராக்டர் மோதி எனது அண்ணனுக்கும், சிவக்குமாருக்கும் அடிப்பட்டுவிட்டதாகவும், அவர்களை அருகிலிருந்தவர்கள் கோபி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், தகவல் கிடைத்து அங்கு சென்று பார்த்தபோது என் அண்ணனை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் இறந்துவிட்டதாக கூறினார்கள். பின்னர் தகவல் கிடைத்து மேற்படி மருத்துவமனைக்கு வந்த போலீசார் என்னை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தனர் தற்பொழுது தற்பொழுது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் மறுநாள் நடைபெற்ற பிரேத விசாரணையின்போது நான் உடனிருந்து எனது அண்ணனின் பிரேதத்தை அடையாளம் காட்டினேன். போலீசார் என்னை விசாரித்ததார்கள்.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும், குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.**